**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 158/2019**

2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய திருமுருகன் **PW3.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, L.L.M.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 06.04.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமுருகன் | | | |
| Father /Husband Name | : | அமிர்தலிங்கம் | Court | : | |
| Village | : | கிராம நிர்வாக அலுவலர், மேலையூர் | Taluk | : | |
| Calling | : | | | | |
| Age | : | 36/2026 | | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேலையூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கடந்த மார்ச் 2022 முதல் ஜூன் 2025ம் ஆண்டு வரை மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அந்த வகையில் எனக்கு இந்த வழக்கின் வாதிகளை தெரியும். மேற்படி மேலப்பெரும்பள்ளம் கிராம புல எண். 225/12ல் 1 ஏக்கர், புல எண். 291/2ல் 23 ½ ஏர்ஸ் மற்றும் புல எண். 228/4ல் 7 ½ ஏர்ஸ் ஆகியவை வாதியின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டது ஆகும். மேற்படி நிலங்கள் வாதிகளின் அனுபவத்திலும் வசத்திலும் இருந்து வந்தது. மேற்படி காலகட்டத்தில் வாதிகள் மேற்படி நிலங்களில் நெல் மற்றும் உளுந்து பயிர் செய்து வந்தார்கள். மேற்படி நிலங்களுக்கு அருகில் புல எண். 224, 225/6, 225/7, 225/8, 225/9, 225/11 ஆகிய நிலங்களும் வாதிகள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டவை ஆகும். மேற்படி நிலங்களும் வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்தது. நான் மேலப்பெரும்பள்ளம்

கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த காலம் வரை மேற்படி புல எண்கள் அனைத்தும் வாதிகளின் அனுபவத்தில் இருந்தது. புல எண். 225/12 ல் கணபதியின் தந்தை தங்கவேல் என்பவரது பெயரில் ஒரு மின் மோட்டார் இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி நிலங்களில் புல எண். 291/2, 228/4 ஐ தவிர மற்ற நிலங்கள் அனைத்திலும் கம்பி வேலி இடப்பட்டுள்ளது.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின்வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**